# திருவாரூர் மாவட்டக் கழக சார்பு அணி நிர்வாகிகள் சந்திப்பில் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!



10 ஆம் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாட்டு மக்கள் நம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், நம் தலைவர் பக்கமும்தான் நின்று கொண்டிருக்கிறார்கள். அதற்கு இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சிறுபான்மையினர் அணி, மீனவர் அணி, பொறியாளர் அணி, வழக்கறிஞர் அணி, மருத்துவ அணி, விவசாய அணி இப்படி நம் கழகத்தில் கிட்டத்தட்ட 23 அணிகள் இருக்கிறது. இந்த 23 அணியில் நீங்கள் அனைவரும் அடுத்து வருகின்ற ஒரு வருடம் ஓயாமல் உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கழகத்தின் ஒவ்வொரு அணியும் திட்டமிட்டு, அணி அணியாகச் சென்று வர இருக்கின்ற தேர்தல் களத்தில், கழகத்தை வெற்றி பெற வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இயக்கத்தில் ஒவ்வொரு தனி மனிதனின் உழைப்பையும், ஒவ்வொரு நிர்வாகியின் செயல்பாட்டையும் நம் தலைவர் அவர்கள் கூர்மையாகக் கவனித்துக் கொண்டு வருகிறார். ஆகவே அதையும் நீங்கள் மனதில் வைத்துக்கொண்டு அடுத்த வருகின்ற ஒவ்வொரு நாளும் கழகப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### ஒவ்வொருவருமே ஒரு ஊடகம்தான்!

நிறைய பேச்சாளர்களை உருவாக்க வேண்டுமென்று இங்கே கூறினீர்கள். இங்கு வந்திருக்கின்ற நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு பேச்சாளர்தான். அதுமட்டுமல்ல, இளைஞர் அணியின் சார்பாக கிட்டத்தட்ட 200 இளம் பேச்சாளர்களை தேர்ந்தெடுத்து தலைமைக் கழகத்திற்கு கொடுத்துள்ளோம். எங்கள் இளைஞர் அணிக்கு தலைவர் அவர்கள் ஒரு இலக்கை கொடுத்தார். இளம் பேச்சாளர்கள் தேவை, குறைந்தது 100 இளம் பேச்சாளர்களை தேர்ந்தெடுத்து கொடுங்கள் என்று கலைஞர் நூற்றாண்டை ஒட்டி தலைவர் கேட்டார். தமிழ்நாடு முழுக்க ஆறு மாதம் பயணித்து, தொடர்ந்து போட்டிகளை நடத்தி இன்றைக்கு சிறந்த 200 இளம்பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்து தலைவரிடம் ஒப்படைத்து இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல அவர்களுக்குத் தொடர்ந்து பேசுவதற்கான வாய்ப்புகளையும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். கழகத் தலைவர் பிறந்தநாளையொட்டி, மும்மொழிக் கொள்கை, நிதிப் பகிர்வில் தமிழ்நாடு வஞ்சிக்கப்படுவது, தொகுதி மறுவரையறை ஆகிய 3 பிரச்னைகளையும் தொகுதி வாரியாக மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று தலைவர் கூறியிருக்கிறார். கூட்டங்கள் நடந்துகொண்டிருக்கிறது.

இங்கு, தகவல் தொழில்நுட்ப அணியில் இருந்து வந்து இருக்கிறீர்கள். தகவல் தொழில்நுட்ப அணிதான் சமூக வலைதளத்தில் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று கிடையாது. இன்னும் சொல்லப்போனல் இளைஞர் அணியில் அதை ஒரு பயிற்சியாவே கொடுக்கிறோம். இப்போது எல்லோரின் கைகளிலும் செல்போன் இருக்கிறது. நீங்கள் அனைவரும் ஒரு ஊடகம்தான். நீங்கள் அனைவரும் ஊடகமாக மாறுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் யூடியூபராக மாறுங்கள். சமூக வலைதளங்களில் உண்மையைப் பேசுங்கள். ஏனென்றால், நம் கழகத்திற்கு மட்டும்தான் வரலாறும், கொள்கையும் இருக்கிறது.

### நமக்கு வரலாறு இருக்கிறது!

தி.மு.க-விற்கு மட்டும்தான் ஐம்பெரும் முழக்கங்கள் இருக்கிறது. அண்ணா வழியில் அயராது உழைப்போம், ஆதிக்கமற்ற சமூதாயம் அமைத்தே தீருவோம், இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம், மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி, வன்முறையைத் தவிர்த்து வறுமையை வென்றே தீருவோம் என்று ஐம்பெரும் முழக்கங்களைத் தந்திருக்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அ.தி.மு.க காரர்களைப் பார்த்து உங்களின் கொள்கை என்னவென்று கேட்டுப் பாருங்கள். தி.மு.க-வை எதிப்பதுதான் எங்களின் கொள்கை வேறு ஒன்றும் கிடையாது என்று சொல்வார்கள். அவர்களுக்கு வேறு எந்த கொள்கையும் கிடையாது. வரலாறும் அவர்களுக்கு கிடையாது. நமக்கு மட்டும்தான் கொள்கை, கோட்பாடு, வரலாறு இருக்கிறது. அரசியல் களம் எவ்வளவு முக்கியமோ, அதேபோல் சமூக வலைத்தளமும் மிக முக்கியமானதாக மாறிவிட்டது. எனவே, நீங்கள் ஒவ்வொருவரும் சமூக வலைதளத்தில் ஆக்டிவாக இருங்கள். கழகத்தின் செய்திகளை, தலைவரின் அறிக்கைகளை, தலைவரின் பேச்சுகளை, கட்டுரைகளை உடனே நீங்கள் 10 பேருக்கும் பகிர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலை சரி பார்ப்பது, நடுநிலையான வாக்காளர்கள், முதல் முறை வாக்காளர்களையெல்லாம் சந்தித்துப் பேசி அவர்களையும் நம் கழகத்தில் இணைப்பதற்கான பணிகளில் ஈடுபடுங்கள். தலைவர் அவர்கள் இந்த நான்கு வருடங்களில் எத்தனையோ திட்டங்களை கொடுத்திருக்கிறார். நிச்சயமாக தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஏதாவது ஒரு திட்டத்தில் பயனடைந்த ஒருவராவது இருப்பார்.

### மக்களைச் சந்தியுங்கள்!

உங்களுக்கான வழிகாட்டுதல்களை தலைமைக் கழகமும், மாவட்டக் கழகமும் நிச்சயமாக வழங்கும். அதேபோல் பி.எல்.ஏ-2, பி.எல்.சி. நிர்வாகிகளை ஒருங்கிணைத்து மாவட்டக் கழகத்தோடு இணைந்து அவர்களுக்கான பயிற்சிகளை கொடுக்க வேண்டும். மாவட்ட செயலாளர்களிடமும் மாநில நிர்வாகிகளிடமும் கலந்து பேசிவிட்டு உங்களுக்கான பணியைத் தொடங்குங்கள். சில அணிகளுக்கு மினிட் புத்தகங்கள் கொடுக்கப்பட்டு இருக்கும். அந்த மினிட் புத்தகங்களில் தொடர்ந்து நீங்கள் அதை பதிவிடுங்கள். அது எதிர்காலத்தில் நிச்சயமாக உபயோகமாக இருக்கும்.

வாக்களார்களை சந்திப்பதற்கு நிறைய செலவு செய்து, பெரிய பிரமாண்டமான கூட்டங்களை எல்லாம் நடத்த வேண்டும் என்று அவசியமே கிடையாது. தெருமுனைப் பிரச்சாரங்கள், திண்ணைப் பிரச்சாரங்கள் மிக மிக முக்கியம். நீங்கள் ஒருவரும் உங்களுக்குள் ஒரு 50 வாக்காளர்களைப் பிரித்துக் கொள்ளுங்கள். அந்த 50 வாக்காளர்களை குறைந்தது நான்கு முறையாவது நேரில் சந்தித்துப் பேசுங்கள். நம் திட்டங்களைப் பற்றி அவர்களிடம் சொல்லுங்கள். சிலருக்கு நம் மீது அதிருப்தி இருக்கும், சிலருக்கு திட்டம் வந்து இருக்காது. நிச்சயமாக அதைச் செய்து கொடுப்போம் என்று சொல்லுங்கள்.

### விடியல் தந்த திட்டங்கள்!

விடியல் பயண திட்டத்தின் மூலம் மகளிர் 620 கோடி முறை பயணங்களை மேற்கொண்டு இருக்கிறார்கள். அதுதான் இந்த திட்டத்தின் வெற்றி. இன்றைக்கு பல மாநிலங்களில் இந்த திட்டத்தை அமல்படுத்துகிறார்கள்.

திராவிட மாடல் அரசு என்றால் என்ன என்று கேட்கிறார்களே, அவர்களுக்கு ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லுங்கள். மற்ற மாநிலங்களுக்கு, மற்ற முதலமைச்சர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடியதுதான் ‘திராவிட மாடல்’ என்று சொல்லுங்கள். அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு மகளிருக்கு விடியல் பயணம் திட்டம்.

அடுத்து, பள்ளிக் குழந்தைகளுக்கான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். தினந்தோறும் 22 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்படுகிறார்கள். கல்லூரி படிக்கும் மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டம். கல்லூரி படிக்கும் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம். இந்தத் திட்டங்களின் மூலம் மாணவ- மாணவியருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில் தலைவர் அவர்கள் தொடங்கிவைத்தார். ஒரு கோடியே 55 லட்சம் மகளிர் இந்த திட்டத்திற்கு விண்ணப்பித்தார்கள். அதில் தேர்வு செய்யப்பட்டு இன்று மாதந்தோறும் 1 கோடி 15 லட்சம் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படுகிறது. எங்களுக்கு மகளிர் உரிமைத் தொகை கிடைக்கவில்லை என்று சிலருக்கு சில குறைகள் இருக்கிறது. இன்னும் மூன்று மாதங்களில் சரி செய்யப்பட்டு நிச்சயம் தகுதி உள்ள அனைத்தும் மகளிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் நிச்சயமாக வழங்கப்படும். சட்டமன்றத்திலும் இந்த உறுதியைத் தந்துள்ளேன்.

### வேறெங்கும் இல்லாத திட்டம்!

இதைத்தவிர, மக்களைத் தேடி மருத்துவம் உள்ளது. அதேபோல, 11, 12-ஆம் வகுப்பில் என்ன படிக்க வேண்டும், எந்த கல்லூரிக்கு செல்ல வேண்டும், கல்லூரியில் என்னென்ன திறன் பயிற்சி படிக்க வேண்டும், என்ன வேலைக்கு செல்ல போக வேண்டும், அந்த வேலைக்கான பயிற்சி, அவர் படிப்பதிலிருந்து வேலைக்கு சென்று சேரும் வரை ஒரு இளைஞரின், ஒரு மகளிரின் வாழ்வையே சரி படுத்துகின்ற திட்டம்தான் நான் முதல்வன் திட்டம். நம்மை காக்கும் 48 என்ற ஒரு திட்டம். சாலையில் விபத்து நடந்து விட்டது என்றால் 48 மணி நேரத்தில் யாராக இருந்தாலும், வேறு எந்த நாட்டவராக இருந்தாலும், இங்கு வந்த அடிபட்டது என்றால் 48 மணி நேரம் அவர்களுக்கான மருத்துவ செலவை அரசு ஏற்றுக்கொள்ளும் என்று ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டமெல்லாம் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. இதை மக்களிடத்தில் எடுத்துக் கொண்டு சொல்லுங்கள்.

### வெல்வோம் 200; படைப்போம் வரலாறு!

நம் சார்பு அணிகளை நம்பிதான் தலைவர் அவர்கள் ஒரு உறுதிமொழி எடுத்து இருக்கிறார். வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்று சொன்னது நம்மை நம்பித்தான். அந்த இலக்கு மட்டும்தான் நம் கண்களுக்கு தெரிய வேண்டும். நாம் 200 தொகுதிகள் வெல்ல வேண்டும் என்றால் நாம் அனைவரும் சேர்ந்து 200 சதவிகிதம் உழைக்க வேண்டும். அதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். கழக அணி 200 தொகுதிகள் வெற்றி பெறும் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறார். அதற்கும் மேல் வெற்றி பெற வேண்டும் என்றால், இந்த திருவாரூர் மாவட்டத்தில் இருக்கின்ற திருவாரூர், மன்னார்குடி, நன்னிலம், திருத்துறைப்பூண்டி ஆகிய நான்கு தொகுதிகளிலிருந்து எண்ணிக்கையைத் தொடங்க வேண்டும். அந்த நான்கு தொகுதிகளின் வெற்றியை நீங்கள் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

2026 சட்டமன்றத் தேர்தல் பணியை தொடங்கிய முதல் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். கிட்டத்தட்ட ஐந்து, ஆறு மாதங்களுக்கு முன்பாகவே தொடங்கிவிட்டோம். எப்படி, தேர்தல் பணியை முதலில் தொடங்கினோமோ, அதேபோல் தேர்தலில் வெற்றி பெற்று நாம்தான் முதலிடத்திற்கு வர வேண்டும். நாம் அனைவரும் பிரிந்து 23 அணியினராக இருக்கலாம். ஆனால் மனதிற்குள் ஒன்றே ஒன்றை மட்டும் வைத்துக் கொள்ளுங்கள். நாம் அனைவரும் கலைஞர் வழியில் வந்த நம் தலைவர் அணி என்ற ஒரே அணி என்பதை மட்டும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

2026-ஆம் ஆண்டு ஏழாவது முறையாக கழக ஆட்சி அமைய வேண்டும் என்றால், நம் தலைவர் இரண்டாவது முறையாகத் தொடர்ந்து முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால், அதற்கு உங்களின் உழைப்பு மிக மிக முக்கியம் என்பதைக் கூறிக்கொண்டு, இந்த வாய்ப்பை அளித்த அண்ணன் பூண்டி கலைவாணன் அவர்களுக்கும், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, வந்திருக்கும் அனைத்து சார்பு அணி நிர்வாகிகளுக்கும் மீண்டும் எனது வணக்கத்தைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் மற்றும் தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கலைவாணன், நகர கழகச் செயலாளர் வாரை பிரகாஷ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் இளையராஜா, ஆனந்தகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி குமார் உள்பட 23 சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

## வீடு கேட்டு கோரிக்கை வைத்த

# 6 மணி நேரத்தில் நிறைவேற்றிய துணை முதலமைச்சர்!

திருவாரூர், மார்ச் 8 -

துணை முதலைமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் மாவட்டம் பழவனக்குடிகிராமத்தைச் சேர்ந்த நான்கு பேருக்கு கலைஞர் கனவு இல்லம் வீடு திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான நிதியுதவி வழங்கினார். வீடு கேட்டு கோரிக்கை வைத்த 6 மணி நேரத்தில் நிதியுதவி வழங்கிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு பயனாளிகள் மனமார்ந்த நன்றியினை தெரிவித்தனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திருவாரூர் மாவட்டம், பழவனக்குடி ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிருடன் நேற்று முன்தினம் (6.3.2025) காலை கலந்துரையாடினார். அப்போது, அங்கு வருகை தந்திருந்த பழவனக்குடி பொதுமக்களில் ஐந்து பேர் வீடு மற்றும் பட்டா வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அவர்களின் கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து, அவற்றை நிறைவேற்றும் வண்ணம், திவ்யா ராஜு, நாகராஜ் முருகையன், ஸ்டாலின் சௌந்தரராஜன், சுகன்யா மேகநாதன் உட்பட 4 பேருக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் வீடு கட்டுவதற்கான நிதியுதவியை வழங்கும் வகையில் அதற்குரிய ஆணையையும், சுகன்யா மேகநாதனுக்கு வீட்டு மனைப் பட்டாவையும், அன்று மாலையே துணை முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட பயனாளிகளிடம் நேரில் வழங்கினார்கள்.

தங்களுடைய கோரிக்கையை ஏற்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கோரிக்கை விடுத்த 6 மணி நேரத்துக்குள் தீர்வை ஏற்படுத்தி உடனுக்குடன் வீடு கட்ட நிதியுதவியும், வீட்டுமனைப் பட்டாவும் வழங்கியமைக்காக பயனாளிகள் ஐவரும் தமிழ்நாடு அரசையும், முதலமைச்சர், துணை முதலமைச்சர் அவர்களையும் வாழ்த்தி மகிழ்ந்தனர்.

## பயனாளிகள் வாழ்த்தி மகிழ்ந்தனர்!





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.3.2025) திருவாரூர் மாவட்டத்தில் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின்போது வீட்டுமனை பட்டா கேட்டு கோரிக்கை மனு அளித்த மனுதாரர்களின் வீடுகளுக்கே நேரில் சென்று வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கினார். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் வ.மோகனசந்திரன் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.